# தமிழ் மொழியும் இலக்கியமும்

## ஆண்டிறுதிப் பரீட்சை – 2024

## தரம் - 11

## விடைகள்

### (பகுதி - 1)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1-1 | 2-2 | 3-1 | 4-3 | 5-3 | 6-4 | 7-1 | 8-1 | 9-3 | 10-4 |
| 11-3 | 12-3 | 13-4 | 14-1 | 15-3 | 16-4 | 17-3 | 18-3 | 19-1 | 20-4 |
| 21-1 | 22-1 | 23-2 | 24-1 | 25-4 | 26-1 | 27-3 | 28-1 | 29-3 | 30-1 |
| 31-3 | 32-1 | 33-1 | 34-4 | 35-1 | 36-1 | 37-1 | 38-2 | 39-3 | 40-2 |

### பகுதி II

### விடைகள்

1.

i. உண்டால் + அம்ம +இவ்வுலகம்+ இந்திரர் +அமிழ்தம்+இயைவது+ஆயினும்+இனிது+என
ii. இப்போது இயலாது மகனே, நேரம் போய்விட்டது. நாளை இரவு சொல்கிறேன். வா படுப்போம்.
iii. நீங்கள் இங்கே வேகமாக வராதீர்கள்.
iv. குன்றக்கூறல், மிகைப்படக் கூறல்
v. பெயர் - மக்கள்
வினை – குடித்தல்
vi. பெய்து, காடு
vii. எழுவாய் - நீ
பயனிலை - தாராயோ
viii. முதலாளி, பிரதிவாதி
ix. பெயர்த்தொடர்
x. மேகம் சூழ்ந்து வானம் இருண்டது ஆனாலும்/ஆயினும்/எனினும்/ஆனபோதிலும் மழை சிறிதளவும் பெய்யவில்லை.

2 பொருளமைவும் அமைவும் - 12 புள்ளிகள்

எழுத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் - 06 புள்ளிகள்
எழுத்து நுட்பங்கள் - 05 புள்ளிகள்
தலைப்பு – 02 புள்ளிகள்

3.

- மொழியொரு கருத்துப் பரிமாற்ற ஊடகம்.
- மற்றவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு பேச வேண்டும்.
- இலக்கியக் கலையில் படைப்பாளி மொழியை பிரதான தொடர்பு சாதனமாகப் பயன்படுத்தகின்றான்.
- மொழி மனிதன் அறிவுநிலைப்பட்டுள்ளதை அடையாளப்படுத்துகின்றது.
- பல்லின மொழிப் பயன்பாடு சர்வதேச தன்மையையும் அபிவிருத்தியையும் மேலோங்கச் செய்கின்றது.

விடய உள்ளடக்கம் - 06 புள்ளிகள்
சொல்லளவு – 02 புள்ளிகள்
மொழிநடை – 02 புள்ளிகள்

i. காலத்தின் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்பவே இலக்கியம் பிறக்கின்றது.
ii. கோவை, உலா, பரணி
iii. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தோன்றியவையாக இருந்தாலும் காலத்தின் தேவைக்கேற்ப வளைந்து கொடுத்துப் பிற காலகட்டங்களிலும் வாழும்
iv. செய்யுள் இலக்கியம் ஓங்கியிருந்த காலத்தில் உரைநடையிலுமாகப் பயின்று நாடகம் தனக்கொன தனித்துவ வரலாற்றைப் படைத்துக் கொண்டுவிட்டது.
v. தான் செல்வாக்குப் பெற்றுச் சிறந்து நின்ற காலகட்டத்தையும் கடந்து நிற்கும் ஓர் இலக்கிய வகையாக காவியம் அமைந்துள்ளது.

5. அமைப்பு – 05 புள்ளிகள்
உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
மொழிநடை – 03 புள்ளிகள்

## பகுதி III விடைகள்

1. அ) சிறிய மீனின் முட்டையை விடவும் சிறியது.
ஆ) அதிவீரராம பாண்டியன்

2. அ) கம்பராமாயணம்
ஆ) நாவலர் எழுந்த விதத்தினைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தியுள்ளார்

3. அ) மனம்
ஆ) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

4. அ) இளமையான குரங்கு
ஆ உயர்வுநவிற்சி அணி

5. அ) மருத நிலத்துத் தலைவன்
ஆ) தோழி தலைமகன் வாயில்களுக்கு உரைத்தது

6. அ) காதணி
ஆ) இந்திரனுக்கு வழங்கினான்.

7. அ) புறநானூறு
ஆ) வெற்றி முரசைக் கொட்டுகின்ற வேந்தர் பறம்பு மலையைக் கைப்பற்றிவிட்டனர்.

8. அ) மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்
ஆ) ஆங்கில மொழியில் எழுதப்பட்டது.

9. அ) திருமகள்
ஆ) இந்த உலகம் எல்லாவற்றையும் படைத்த பிரம்மனை தனது உந்திக் கமலத்திலிருந்து உருவாக்கியவன்.

10. அ) பரந்த உலக மனப்பான்மை
ஆ) கனியன் பூங்குன்றனார்

02.

1. அ) மூன்றுலகும் ஈன்றான் - பிரம்மன்
முன் ஈன்றான் - திருமால்
ஆ) தசரதன் - அரசர்கள் வரி செலுத்துவதற்காக வந்து குழுமியிருக்கின்ற முற்றத்தையுடையவன்
பரதன் - வெற்றி மாலை சூடியவன்

2. அ) சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்த்து செய்யப்பட்ட மருந்து உடற் பிணியை நீக்குவது போல திரிகடுகம் நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று விடயங்கள் உள்ளத்திற்கு நலனைத் தருகின்றது.
   ஆ) ஆசிரியர் இல்லாத ஊர், பிரச்சினைகளைத் தீர்க்கும் அறிஞர் இல்லாத சபை, பார்த்து உண்ணும் தன்மையில்லாதவர் பக்கத்தில் இருத்தல்

3. அ) மகரந்தத் தாதுக்களைத் தனது வாயினால் ஊதி வண்டுகள் ரீங்காரம் செய்யும் குளிர்ச்சி பொருந்திய நாடு.
   ஆ) சமாதானமாக நாட்டைத் தராவிட்டால் போர் செய்தாவது நாட்டைக் கைப்பற்றுவது பழியை ஏற்படுத்தாது.

4. அ) நாவல் அவர்களும் தனது வலியை மறந்து சட்டசபை உறுப்பினரைத் தெரிவு செய்ததால்.
   ஆ) பிரார்த்துவம் - பழவினை, முன்வினைப்பயன்
   ஆவாகனம் பண்ணி வைத்தல் - பிடித்து வைத்தல்

5. அ) மூத்தம்மாவின் காதில் பெரிய தோடுகள் மேலிருந்து கீழாக நேர் வரிசையில் தொங்கிக்கொண்டிருக்கும். கழுத்தில் கருகமணி மாலை சதா மின்னிக் கொண்டிருக்கும். கையில் அகல செப்புக் காப்புகள்.
   ஆ) பல நேர்த்திக்கடன் கொடுத்து பிள்ளை பிறந்தது.

3. தத்தைவிடு தூது

அ)

- மூடர், பேடர், முதியோர், மெலியோர் போன்றவர்களுக்குப் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது.
- பேதையருக்கும் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது
- பணத்துக்காகப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது.
- முன்னர் கண்டும் கேட்டும் இராத ஒருவருக்குப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கின்றனர்

ஆ)

- தலைவியைப் பலவாறு புகழ்தல்
- தலைவியைப் பிரிந்து வாழ்பவன்
- தானே தலைவிக்குப் பொருத்தமான மணமகன் எனக் கூறி கிளியைத் தூது அனுப்புதல்.
- பொருத்தமற்றவரைத் திருமணம் செய்து கொடுத்துவிடுவர் என மனம் வருந்துபவன்
  பாரதியார் சுயசரிதையில்

அல்லது

அ) பிள்ளைக்காக ஒவ்வொரு நாளும் காத்துக் கொண்டிருத்தல்.
அவளது நினைவுகளால் கோர்க்கப்பட்ட மனம் அப்பிள்ளையின் பின்னால் இழுபட்டுச் செல்லல்.

ஆ) உருவகம் - சுதந்திர நற்பயிர்
உவமை

- தேசபக்தர் வரவினைக் காத்தல் போல
- நித்திலப் புன்னகை
- மேழை யாண்டு தேர் செலும்யாங்கு இழுப்புற்றென
- பூத்தஜோதி வதனம்
- ஆடு போல் தாவித்தாவி
- கண்ணிலாதவல் போலத் திகைப்பர்
-

4. எது நல்ல சினிமா

அ)

- நாடகத்திற்கு அடிமைப்படல்.
- நாடக மேடை மாதிரியே செட் போடப்பட்டு கமிராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து படமாக்கப்பட்டது.
- இயக்குனர்கள், வசனகர்த்தாக்கள், நடிகர்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத்திலிருந்து வந்தவர்கள்

ஆ)

- எளிமையான மொழிநடை
- பொருத்தமான உதாரணங்கள்
- காரண காரியத் தொடர்பு
- தெளிவான விளக்கம்
- சான்றாதாரங்கள்
- பிற மொழிச் சொற்களின் பயன்பாடு

கம்பியுட்டர் சிறுகதை

அ)

- அரவிந்தனின நண்பர்கள் வந்து போனமை
- மேகலாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்
- கம்பியுட்டர் மொழியில் பேசிக் கொண்டமை

ஆ)

- மையக் கருத்துக்கு ஏற்றாற் போன்று அமைந்திருத்தல்.
- கதையின் ஆரம்பத்தில் கம்பியுட்டர் முக்கியம் பெறல். (கம்பியுட்டர் வாங்கும் காட்சி)
- கதை நகர்விலும் கம்பியுட்டர் முக்கியம் பெறல் (கம்பியுட்டர் வரவால் ஏற்பட்ட மாற்றங்கள், கதாசிரியர் பயன்படுத்திய விதம், கம்பியுட்டரின் நம்பிக்கைத் துரோகம்)
- கதை முடிவும் கம்பியுட்டரை அடிப்படையாகக் கொள்ளல்

5.

அ) உழவனின் தன்னலம்

- பட்டி பெருக வேண்டும்
- பாற்பானை பொங்க வேண்டும்
- செல்வம் பெருக வேண்டும்

உழவனின் பொது நலம்

- மேதினியோர் வாழ வேண்டும்
- நாடு செழிப்புடன் விளங்க வேண்டும்.
- நல்ல மழை பெய்ய வேண்டும்
- உழவுத் தொழில் வளர்ச்சி காண வேண்டும்
- உலக மக்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வேண்டும்.

ஆ) உலகத்தில் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றை நம்பியிருக்கின்றது. நான் உன்னை நம்பிக் கொண்டிருக்கின்றேன். உச்சி வெயிலில் கஷ்டப்படுகிறேன். உள்ளம் மட்டும் உன்னையே நம்பியிருக்கின்றது.

6.

அ) பரந்த உலக மனப்பான்மை, விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை, பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என் கடன் பணி செய்து கிடப்பதே, அகத்திணை புறத்தினை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

ஆ) பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும் சமணரும் புத்தரும் ஐரோப்பிய கிறிஸ்தவரும் மகமதியரும் தமிழ்ப் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். சிலப்பதிகாரம், மணிமேகலை, தேம்பாவணி, சீறாப் புராணம் என்பவற்றை ஆராயும் போது காணலாம்.

7.

அ) ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் சமமாக விற்கப்படுகின்ற மழை இல்லாமல் போன பஞ்ச காலத்தில் தங்களது வேலைகளை மாத்திரம் பர்க்கின்ற சுயநலவாதிகள் யார் தடுத்த போதிலும் தட்டு நீட்டப்படுவதற்கு முன்னரே சோறிடும் தர்மத்திற்கு நான் இருக்கின்றேன் எனக் கூறி நெஞ்சை உயர்த்திக் காட்டியவர்.

ஆ)

| பாம்பு | எள்ளு |
| --- | --- |
| படமெடுத்து ஆடிய பின் குடத்தை அடையும் | செக்கிலிட்டு ஆட்டிய பின்னர் எண்ணெயைக் குடத்தில் சேர்ப்பர் |
| ஆடும்போது இரையும் | செக்கிலிட்டு ஆட்டும்போது ஒருவிதமான சத்தம் உண்டாகும் |
| பாம்புள்ள பெட்டியைத் திறந்தால் தன் தலையை உயர்த்திக் காட்டும் | எண்ணெய் இருக்கும் குடத்தை மூடித் திறந்தால் அது நமது முகத்தைக் காட்டும். |
| பாம்பு தீண்டினால் விஷம் தலைக்கேறி பரபர எனத் தினவு உண்டாகும் | எண்ணெயைத் தலையில் வைத்தால் பரபரவென ஒருவிதமான குளிர்ச்சி உண்டாகும் |
| பிளவுபட்ட நாக்கை உடையது | எள்ளிலிருந்து எண்ணெயை எடுத்த பின் எஞ்சுவது பிண்ணாக்கு ஆகும். |